Regd.with the Registrar of Newspapers for India.No.TN TAM /2007/22101
Regd.TN/CC(S)Dn/326/10-12

**எல்லா கிறிஸ்தவ புத்தகக் கடைகளிலும் கிடைக்கும்!**



பழைய பாடல்கள்
புதிய இசையில்..

காப்பார் உன்னை காப்பார்..
தொல்லை கஷ்டங்கள்..
ஆதாரம் நீர்தானய்யா..
சோர்ந்து போகாதே..
பாடுவேன் பரவசமாகுவேன்..

**வேத ஆராய்ச்சி பாடங்கள்**

வாரந்தோறும் – திங்கள் கிழமைகளில்
மாலை - 6.30 மணி முதல் 8.30 மணி வரை
இடம்: ஏ-4, டேஜு ப்ளாஸா, 2, தெற்கு அவென்யூ,
ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை - 600 015.
( சைதாப்பேட்டை கோர்ட் அருகில் )

**வேதத்தின் ஆழங்களைப் படித்து தெரிந்துகொள்ளவேண்டும்
என்று வாஞ்சிப்பவர்கள் இதில் கலந்துகொள்ளலாம்**



ஜெப தேவைக்கும்
தேவ ஆலோசனைக்கும்

+ 91 - 44 - 22353500 + 91 - 9940667881
www.kennedyministries.org
E-mail: nijakennedy@yahoo.com

Owned and Published by: S. Paulraj Kennedy from A-1, Deju Plaza, No. 2, South Avenue, Srinagar Colony, Saidapet, Chennai - 600 015. Phone: +91 - 44 - 22353500
Printed by: Jolly Peter at Sharp Offset Printers, New No. 96, Old No. 223, Peters Road, Royapettah, Chennai - 600 014. Phone: +91 - 44 - 28480607
Editor: Nija Kennedy

# ஒளி எக்காளம்

VOL . 6 ISSUE . 4 தனிப்பிரதி ரூ 20/- டிசம்பர் 2012



# கர்த்தரைப்பற்றி அறிகிற அறிவு



– நிஜா கென்னடி

தனக்கு அதிகம் உண்டாகத் தரித்திரனை ஒடுக்குகிறவன் தனக்கு குறைச்சலுண்டாகவே ஐசுவரியவானுக்குக் கொடுப்பான். (நீதிமொழிகள் 22:16). நீ செல்வந்தனாகும் பொருட்டு ஏழைகளைத் துன்புறுத்துவதும், செல்வந்தர்களுக்கு அன்பளிப்புகளைக் கொடுப்பதும் ஆகிய இரண்டு செயல்களும் உன்னை ஏழையாக்கும் (நீதிமொழிகள் 22:16) (எளிய வேதாகமம்).

He who oppresses the poor to increase his wealth and he who gives gifts to the rich - both come to poverty (proverbs 22:16) (NIV).

தங்கள் வசதிகளை, பணம், சொத்துக்களை பெருக்கிக் கொள்வதற்காக ஏழைகள் மற்றும் தேவையோடு இருப்பவர்களை பயன்படுத்தி, அவர்களுக்குரியதை எடுப்பவர்களும், பணக்காரர்களுக்கு வெகுமதிகளைக் கொடுப்பவர்களும் வறுமையடைவார்கள் என்று கர்த்தருடைய வார்த்தை கூறுகிறது. தங்களுடைய சுய ஆதாயத்திற்காக ஏழைகளுக்குரியதை நேர்மையற்ற முறையில் எடுத்துக் கொள்பவர்கள், ஏழ்மை நிலைக்குத் தள்ளப்படுவார்கள். சிலர் பணக்காரர்களது உறவு தங்களுக்கு வேண்டும் என்பதற்காக பரிசுகளை கொடுப்பார்கள். சிலர் தங்களது காரியத்தை நடப்பிப்பதற்காக, உயர் அதிகாரிகளுக்கு பணம் (லஞ்சம்) கொடுத்து இணங்க வைத்து நேர்மைக்கு எதிராக காரியங்களை செய்வார்கள். இவர்களும் வறுமையடைவார்கள்.

பணக்காரர்கள் தங்கள் பணத்தினால் தங்கள் தேவைக்கும் அதிகமான பொருட்களை வாங்கி வசதியோடிருப்பார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு நாம் பொருட்களை அல்லது பணத்தை கொடுத்தோமானால், அது அவர்களுக்கு உபரிதமானதாகும் (போனஸ்). ஏற்கனவே அவர்களிடம் எல்லாம் இருக்கின்றது. ஏதேனும் அவர்களிடம் இல்லையென்றாலும் அதை வாங்குவதற்கான பணம் அவர்களிடத்தில் இருக்கிறது. நாம் கொடுப்பதை வைத்துத்தான் அவர்கள் வாழவேண்டும் என்ற சூழ்நிலையில்லை. அதை நாம் இல்லாதவர்களுக்கு கொடுக்கும்போது, அது அவர்களுக்கு மிகவும் பிரயோஜனமாக இருக்கும். அந்த குறிப்பிட்ட தேவைக்காக அவர்கள் பல நாட்கள் அல்லது பல மாதங்கள் கர்த்தரிடம் ஜெபித்துக் கொண்டிருந்திருப்பார்கள். நம்மைக்கொண்டு கர்த்தர் அதை அவர்களுக்கு கொடுத்ததன் மூலம் அதற்கான ஆசீர்வாதத்தை கர்த்தர் நமக்குத் தருவார். இதை நாம் பணக்காரர்களுக்கு கொடுத்திருந்தால், இந்த ஆசீர்வாதம் நமக்கு கிடைத்திருக்காது. நம்முடைய ஆசீர்வாதத்திற்கு நாமே தடையாகிவிடக்கூடாது.

நமது வசத்திலிருக்கும் பணத்திற்கும், பொருட்களுக்கும், ஆஸ்திகளுக்கும் நாம் முதலாளியல்ல. கர்த்தர்தான் இவற்றிற்கெல்லாம், ஏன் நமக்கும்கூட முதலாளியாவார். நாம் மேலாளர் (மேனேஜர்) மாத்திரமே. நம் மனது இஷ்டப்படி நாம் எதையும் செய்யக் கூடாது. நான்தான் பணத்தை சம்பாதித்தேன், இது என் பணம், நான் என் விருப்பப்படி யாருக்கு வேண்டுமானாலும் கொடுப்பேன் என்று சொல்லுவது தவறு. கர்த்தர்தான் ஜீவன் கொடுத்திருக்கிறார். வேலை செய்வதற்கு நல்ல சுகம், பெலன், ஆரோக்கியம் கொடுத்திருக்கிறார் என்கிற எண்ணம் எப்பொழுதும் நமக்கு இருக்கவேண்டும். நாம் ஜீவனோடு இருப்பது அவரது கிருபையால்தான்.

நெபுகாத்நேச்சார் இது ''நான் கட்டின மகா பாபிலோன்'' இது என் அரண்மனை! எனது வலிமையினால் நான் எவ்வளவு பெரியவன் என்று காட்டுவதற்காகத்தான் நான் இதைக் கட்டினேன் என்று பாபிலோனிலுள்ள தன் அரண்மனை மாடியிலிருந்து பெருமையோடு பேசினான் (தானியேல் 4:30). அந்நேரமே அவன் மிருகத்தைப் போல மாறினான். அவன் மனுஷரினின்று தள்ளப்பட்டு, மாடுகளைப் போல் புல்லை மேய்ந்தான். அவன் புத்தி தெளிந்தபோது, கர்த்தரை புகழ்ந்து மகிமைப்படுத்தினான். கர்த்தரே ராஜ்யங்களை ஆளுகிறவர், சகல அதிகாரத்தையும் உடையவர் என்பதை உணர்ந்து கொண்டான். அதனால் மறுபடியும் கர்த்தர் அவனை ராஜாவாக உயர்த்தினார். ஆதலால் கர்த்தருக்கு அடங்கி தாழ்மையோடுகூட இருக்க வேண்டும்.

ஒன்றை வாங்குவதையும் அல்லது கொடுப்பதையும் கர்த்தரிடம் கேட்டே செய்யவேண்டும். ஒரு ஏழைக்கு கொடுப்பதற்காக கர்த்தர் நம்மிடத்தில் ஒன்றை கொடுத்திருப்பார். அதை நாம் ஒரு செல்வந்தனுக்கு கொடுத்துவிடக் கூடாது. சின்ன காரியமானாலும் அல்லது பெரிய காரியமானாலும் தேவ சித்தத்தை அறிந்து, அதன்படி செய்ய வேண்டும். அப்பொழுது கர்த்தருடைய ஆசீர்வாதம் நம்மீதும், நம்முடைய சந்ததியின் மீதும் முன்மாரியாகவும், பின்மாரியாகவும் ஆசீர்வாதமான மழையாய் கடந்துவரும்.

பிரியமானவர்களே! நாங்கள் எப்பொழுதும் எல்லோருக்கும் கொடுப்போம் என்று பெருமையோடு பேசாதிருப்போம். கர்த்தருடைய வார்த்தையின்படி கொடுக்க நம்மை ஒப்புக் கொடுப்போம். சுயமாக நம்

இஷ்டம்போல் நடப்பதை விட்டுவிட்டு தேவசித்தத்தை நிறைவேற்றுவோம். கர்த்தருக்கு கீழ்ப்படிந்து அவருக்கு பிரியமாய் வாழ்வோம். தாவீது ராஜா கர்த்தரை எப்பொழுதும் தனக்கு முன்பாக நிறுத்தி வைத்திருந்தான். அதுபோல கர்த்தர் நம்மோடுகூட இருக்கிறார் என்ற உணர்வோடுகூட அவருக்குப் பிரியமாய் இருப்போம். அவரது இருதயத்தின் வாஞ்சையை நிறைவேற்றுவோம்.

**ஏழையாயிருக்கிறான் என்று ஏழையைக் கொள்ளையிடாதே; சிறுமையானவனை நியாயஸ்தலத்தில் உபத்திரவப்படுத்தாதே. கர்த்தர் அவர்களுக்காக வழக்காடி, அவர்களைக் கொள்ளையிடுகிறவர்களுடைய பிராணனைக் கொள்ளையிடுவார்** (நீதிமொழிகள் 22:22,23). ஏழைகள் யாருடைய உதவியும் இல்லாமல் இருப்பதனால், அவர்களுக்குரியதை திருடக்கூடாது என்று கர்த்தர் சொல்லுகிறார். அவர்களுக்குரியதை எடுத்துக் கொண்டால், அவர்களுக்காக பேசுவதற்கு யாரும் இல்லை, யாரும் ஒன்றும் கேட்க முடியாது என்று நினைக்கிறார்கள். எடுப்பது தவறு என்று அறிந்திருந்தும் அவர்களுடைய பொருட்கள், பணம், ஆஸ்திகளை அடைய விருப்பத்தோடு இருப்பது, நியாயமாக அவர்களுக்கு வரக்கூடியதை கொடுக்க மறுப்பது, அவர்களுக்குரியதை சுரண்டுவது, கர்த்தருடைய வார்த்தைக்கு எதிரானது. ஏழைகள் மற்றும் தேவையோடு இருப்பவர்களை சுரண்டி அவர்களுக்குரியதை எடுத்து அவர்களை துன்பப்படுத்தாதே என்று கர்த்தர் சொல்லுகிறார்.ஏனென்றால் கர்த்தர் அவர்கள் பக்கம் இருந்து, அவர்களுக்கு உதவி செய்கிறார். அவர்களிடமிருந்து எடுத்துக் கொண்ட எந்த பொருளையும் அவர் திரும்ப எடுத்துக்கொள்வார். ஏழைகளிடமிருந்து கொள்ளையிட்டதை கர்த்தர் அவர்களிடமிருந்து கொள்ளையிடுவார்.

பிரியமானவர்களே! உங்களுக்கென்று பேச யாருமில்லையா? நியாயத்தை புரட்டி உங்களுக்குரியதை எடுத்துக் கொண்டார்களா? உங்களை வேதனைப்படுத்துகிறார்களா? கவலைப்படாதீர்கள். கர்த்தர் உங்களுக்காக அவர்களிடம் யுத்தம் பண்ணி, உங்களுக்குரியதை அவர்களிடமிருந்து கொள்ளையிட்டு, உங்களுக்குத் திரும்பக் கொடுப்பார். அவர்கள் உங்களுக்கு எதிராக செயல்படவில்லை, கர்த்தருக்கு எதிராக செயல்படுகிறார்கள். கர்த்தருக்கு எதிர்த்து நின்றால், என்னவாகும்? பிரியமானவர்களே! ஒருபோதும் சோர்ந்து போகாதீர்கள்.

**அக்கிரமத்தை யோசித்து, தங்கள் படுக்கைகளின்மேல் பொல்லாப்பு செய்ய எத்தனம்பண்ணித் தங்கள் கையில் வல்லமை இருக்கிறபடியினால், விடியற்காலமாகிறபோது, அதை நடப்பித்து, வயல்களை இச்சித்துப் பறித்துக் கொண்டு வீடுகளை இச்சித்து எடுத்துக் கொண்டு, புருஷனையும் அவன் வீட்டையும், மனுஷனையும் அவன் சுதந்திரத்தையும் ஒடுக்குகிறவர்களுக்கு ஐயோ!** (மீகா 2:1,2). பாவம் செய்ய திட்டமிட்டவர்களின் வாழ்க்கையில் துன்பங்களும், பல போராட்டங்களும் வரும். அவர்கள் நியாயமில்



லாமல், அநீதியான காரியங்களைச் செய்வதால், அவர்களுக்கு மாத்திரமல்ல, அவர்கள் பரம்பரையினருக்கும் சாபம் பின் தொடரும். கர்த்தருடைய விருப்பத்தை நிறைவேற்றாமல், தங்கள் திட்டங்களையும், மனவிருப்பங்களையும் நிறைவேற்ற விரும்புகின்றனர். அவர்கள் மற்றவர்களை ஏமாற்றி அவர்களுக்குரியதை எடுக்க விரும்புகிறார்கள்.

ஒருவரது மனதிலுள்ள திட்டங்களும், எண்ணங்களும் அவரது குணத்தை பிரதிபலிக்கிறது. அவர் யார் என்பதை மற்றவர்களுக்கும் காண்பித்துக் கொடுக்கும். பேராசையால் நிறைந்து மற்றவர்களுக்குரியதை எடுத்துக் கொள்ள வேண்டும் என்கிற நோக்கத்தோடு இருக்கிறீர்களா? தீய எண்ணங்கள்தான் தீய காரியங்களை செய்ய வைக்கும். நம்முடைய உள்ளம் பேராசையால் நிறைந்திருக்கிறதா? மனந்திரும்புவோம். **அநியாயத்தின் திரவியங்கள் ஒன்றுக்கும் உதவாது; நீதியோ மரணத்துக்குத் தப்புவிக்கும்** (நீதிமொழிகள் 10:2).

**ஆகையால் கர்த்தர்: நான் இந்த வம்சத்தாருக்கு விரோதமாகத் தீமையை வருவிக்க நினைக்கிறேன்** (மீகா 2:3). மற்றவர்களை ஏமாற்றுகிறவர்களுக்கு பல சிக்கல்களும், துன்பங்களும் வரும். அவர்கள் குடும்பங்களில் மோசமான சூழ்நிலை உண்டாகி, அவர்களை நெருக்கும். நுகத்தடியைப்போல பாரத்தை சுமந்து கொண்டேயிருப்பார்கள். பிரியமானவர்களே! மற்றவர்களுக்குரிய பொருட்களையோ, பணத்தையோ, நிலங்களையோ எடுத்துக் கொள்ள விரும்பாதீர்கள். அப்படி அவர்களுக்கு உரிமையானவற்றை இச்சித்து எடுத்துக் கொண்டு அவர்களை ஒடுக்கி, மனதை காயப்படுத்துகிறவர்களுக்கு ஐயோ என்று கர்த்தருடைய வார்த்தை கூறுகிறது. கர்த்தர் உங்களுக்கு கொடுத்தவற்றில் திருப்தியோடு இருங்கள். கர்த்தருடைய கோபம் நம்மேலும், நம் பிள்ளைகள் மேலும் வராதபடி காத்துக் கொள்வோம். **தரித்திரனை ஒடுக்குகிறவன் அவனை உண்டாக்கினவரை நிந்திக்கிறான்; தரித்திரனுக்கு தயை செய்கிறவனோ அவரைக் கனம்பண்ணுகிறான்** (நீதிமொழிகள் 14:31).

**நீங்கள் பண ஆசையில்லாதவர்களாய் நடந்து, உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள்** (எபிரெயர் 13:5). **பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தை விட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக்குத்திக் கொண்டிருக்கிறார்கள்** (1 தீமோத்தேயு 6:10). **உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான்; ஐசுவரியவானாகிறதற்குத் தீவிரிக்கிறவனோ ஆக்கினைக்குத் தப்பான்** (நீதிமொழிகள் 28:20). **பொருளாசையுள்ள எல்லாருடைய வழியும் இதுவே. இது தன்னையுடையவர்களின் உயிரை வாங்கும்** (நீதிமொழிகள் 1:19). பேராசையுடையவர்கள் எப்பொழுதும் அதினாலேயே அழிந்து போவார்கள். **பொருளாசையை வெறுக்கிறவன் தீர்க்காயுசைப் பெறுவான்** (நீதிமொழிகள் 28:16).

**பிறனுடைய எல்லைக்குறியை ஒற்றிப்போடுகிறவன் சபிக்கப்பட்டவன் என்று** உபாகமம் 27:17

கூறுகிறது. **உன் பிதாக்கள் நாட்டின பூர்வ எல்லைக்குறியை மாற்றாதே** (நீதிமொழிகள் 22:28). முற்பிதாக்களால் குறிக்கப்பட்ட பழைய எல்லை அடையாளங்களை மாற்றாதே என்று கர்த்தர் கூறுகிறார். மற்றவர்களின் இடத்தை எடுத்துக் கொள்வதற்காக எல்லைக்கல்லை மாற்றுவது, மற்றவர்களுக்குரியதை திருடுவதற்கு சமம். நிலத்தை மட்டுமல்ல, மற்றவர்களுக்குச் சொந்தமான பொருட்கள், பணம், எதையும் எடுத்துக் கொள்வது கொள்ளையடிப்பதற்குச் சமம்.

**பூர்வ எல்லைக்குறியை மாற்றாதே; திக்கற்ற பிள்ளைகளுடைய நிலங்களை அபகரித்துக் கொள்ளாதே. அவர்களுடைய மீட்பர் வல்லவர்; அவர் உன்னுடனே அவர்களுக்காக வழக்காடுவார்** (நீதிமொழிகள் 23:10,11). எந்த மனிதர்களுடைய ஆதரவும், உதவியும், எந்தவித பாதுகாப்பும் இல்லாமல், தேவையோடு இருக்கும் ஏழை ஜனங்களை ஏமாற்றுகிறவர்களுக்கு எதிராக கர்த்தர் இருப்பார். அவர்கள் நேர்மையற்று நடத்தப்படுவதை கர்த்தர் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க மாட்டார். அவர்களை ஏமாற்றி அவர்களுக்குரியதை எடுத்துக் கொள்ளுகிறவர்களோடு கர்த்தர் வழக்காடுவார். கர்த்தர் சர்வ வல்லமையுள்ளவர். ஏழைகளை அடக்கி, ஆளுகை செய்பவர்கள் கையிலிருந்து அவர்களை விடுவிப்பார். பிரியமானவர்களே! உங்களுக்குரியதை எடுத்துக் கொண்டார்களா? கலங்காதீர்கள். கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார். [illegible] கிறிஸ்து உங்களை விடுவிப்பார்.

யோபு இப்படியாகக் கூறுகிறான், **மற்றொருவனிடமிருந்து நான் என் நிலத்தை (அபகரிக்கவில்லை) திருடவில்லை. நிலத்தை திருடியதாக ஒருவனும் என்மீது குற்றஞ்சாட்ட முடியாது. நிலத்திலிருந்து நான் பெற்ற உணவிற்காக எப்பொழுதும் உழவர்களுக்கு ஊதியம் கொடுத்துள்ளேன். ஒருவனுக்கு சொந்தமான நிலத்தை கைப்பற்ற நான் ஒருபோதும் முயன்றதில்லை** (யோபு 31:38,39) (எளிய வேதாகமம்). யோபு தன்னிடம் வேலை செய்பவர்களுக்கு உழைப்பிற்கேற்ற கூலியைக் கொடுத்தான். மற்றவர்களுக்குரியதை எடுத்துக் கொள்ளவில்லை.

பணமும், உணவும், வீடும் இல்லாதவர்களுக்கு, தாய், தகப்பனில்லாத பிள்ளைகளுக்கும் உதவி செய்து, தகப்பனைப்போலிருந்தான். ஏழைகள் உதவிக்காக கூப்பிட்டபோது, யோபு உதவியாயிருந்தான். அவர்களை ஒடுக்கி இரக்கமற்ற முறையில் நடத்தினதில்லை. அவர்கள் வழக்குகளை விசாரித்து, நியாயமாக வரவேண்டிய அவர்களுக்குரிய சுதந்திரத்தையும், உரிமையையும் கிடைக்கும்படி செய்தான். **முறையிடுகிற ஏழையையும், திக்கற்ற பிள்ளையையும், உதவியற்றவனையும் இரட்சித்தேன்** (யோபு 29:12).

**குணசாலியான பெண், சிறுமையானவர்களுக்குத் தன் கையைத் திறந்து, ஏழைகளுக்குத் தன் கரங்களை நீட்டுகிறாள்** (நீதிமொழிகள் 31:20). ஏழை



களுக்கும், தேவையோடு இருந்தவர்களுக்கும் தாராளமாய் கொடுக்கிற குணமுடையவளாய் இருந்தாள். **அன்றியும் நன்மை செய்யவும், தானதர்மம் பண்ணவும் மறவாதிருங்கள்; இப்படிப்பட்ட பலிகளின்மேல் தேவன் பிரியமாயிருக்கிறார்** (எபிரெயர் 13:16).

**ஊமையனுக்காகவும், திக்கற்றவர்களெல்லாருடைய நியாயத்துக்காகவும் உன் வாயைத் திற; உன் வாயைத் திறந்து நீதியாய் நியாயந்தீர்த்து, சிறுமையும், எளிமையுமானவனுக்கு நியாயஞ்செய்** (நீதிமொழிகள் 31:8,9). நம்பிக்கையில்லாதவர்களுக்கும், பாதுகாப்பில்லாதவர்களுக்கும், உதவியாய் இருந்து அவர்களது நியாயத்தையும் வழக்கையும் விசாரிக்கிறவர்களாக இருக்கவேண்டும்.

ஒரு சகோதரன், அலுவலகத்தில் தன்னுடன் வேலை பார்க்கும் ஒருவனால் இம்சைக்குள்ளானார். அந்த சகோதரனை தினம்தோறும் அவன் அதிகாரம் பண்ணி, பல வேலைகளைச் செய்யச் சொல்லி கோபமூட்டி பல விதங்களில் தொந்தரவு கொடுத்தான். அந்த சகோதரன் மிகுந்த மன உளைச்சலுக்குள்ளானார். நாளுக்கு நாள் அந்த சகோதரனின் துக்கம் அதிகரித்தது. சமாதானத்தை இழந்து காணப்பட்டார். ஒரு நாள் அந்த சகோதரன், தனது பிரச்சனைகளை அதே அலுவலகத்திலுள்ள தனது நண்பனிடம் பகிர்ந்து கொண்டார். மேலும் தனக்கு தொந்தரவு கொடுப்பவனிடம் போய் பேசி, நியாயத்தை எடுத்துச் சொல்லி, பிரச்சனைக்கு தீர்வு செய்யும்படி கூறினார். ஆனால், அவரது நண்பனோ எனக்கு உன்னுடைய உறவும் வேண்டும், அவனது உறவும் வேண்டும் என்று சொல்லிவிட்டு, நான் உனக்கு பிரச்சனை கொடுப்பவனிடம் போய் பேச மாட்டேன் என்று கூறிவிட்டான். அந்த சகோதரன் மிகவும் ஏமாந்து போனார். அவர் கர்த்தரை நோக்கி, தனக்கு நியாயம் செய்யும்படி ஜெபித்தார். கர்த்தர் அவர் ஜெபத்திற்கு பதில் கொடுத்தார். தொந்தரவு செய்தவனின் உண்மையான குணத்தை அந்த அலுவலகத்திலுள்ள எல்லோரும் அறியும்படியாக கர்த்தர் ஒரு சம்பவத்தை அனுமதித்தார்.

பிரியமானவர்களே! உங்களுக்கென்று பேச, உங்கள் நியாயத்தை எடுத்துச் சொல்ல யாருமேயில்லையா? கர்த்தர் உங்களுக்காக இருக்கிறார். உங்கள் பிரச்சனைகளை எந்த மனிதரிடமும் போய் கூறாதீர்கள். **நாசியில் சுவாசமுள்ள எந்த மனிதனையும் நம்பாதீர்கள். அது சாபம்** (எரேமியா 17:5). கர்த்தரிடம் முறையிடுங்கள். உங்கள் எல்லா பிரச்சனைகளையும் நண்பனிடம் பேசுவதுபோல் கர்த்தரிடம் பேசுங்கள். கர்த்தரே நியாயத்திற்கு ஜெயங்கிடைக்கப் பண்ணுகிறவர். நிச்சயமாக கர்த்தர் உங்கள் பிரச்சனைகளுக்கு நியாயமான தீர்ப்பை வழங்குவார்.

**நீதிமான் ஏழைகளின் நியாயத்தை கவனித்தறிகிறான்; துன்மார்க்கனோ அதை அறிய விரும்பான்** (நீதிமொழிகள் 29:7). நீதிமான்கள் ஏழை ஜனங்களின் உரிமைகளை புரிந்து கொள்வார்கள். நேர்மையான காரியங்களை அவர்களுக்கு செய்து,

அவர்கள்மேல் அக்கரையுள்ள வர்களாக இருப்பார்கள். அவர்களது நலத்திற்கும், பாதுகாப்பிற்கும் வேண்டியன கிடைக்குமாறு பார்த்துக் கொள்வார்கள். அவர்களுக்கு ஆதரவாக இருந்து அவர்களின் உணர்வுகளை அடையாளம் கண்டுகொள்வார்கள். கர்த்தரின் விருப்பத்தை நிறைவேற்று கிறவர்களாக இருப்பார்கள்.

தீய ஜனங்களோ, ஏழை எளியவர் களின்மேல் அக்கரை கொள்ளமாட்டார் கள். அவர்களின் தேவைகளையும், உரிமைகளையும் அறிந்துகொள்ள விரும்பமாட்டார்கள். தாங்கள் தேவனை அறிந்து கொள்ளாததினால், கஷ்டப்படும் ஏழைகளின் உணர்வு களையும், அவர்களின் தேவை களையும், வாஞ்சைகளையும் புரிந்து கொள்ளமாட்டார்கள். ஏனென்றால் அவர்களது வாழ்க்கையில் தேவனுக்கு இடமேயில்லை.

யூதாவின் ராஜாவாகிய யோசியா கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப் படிந்து நடந்தான். **அவன் சிறுமையும், எளிமை யுமானவனுடைய நியாயத்தை விசாரித்தான்; அப்பொழுது சுகமாய் வாழ்ந்தான்; அப்படிச் செய்வதல்லவோ என்னை அறிகிற அறிவு என்று கர்த்தர் சொல்லு கிறார்** (எரேமியா *22:16*). அவன் கர்த்தருக்கு உண்மையாய், நேர்மையான ஒரு வாழ்க்கையை வாழ்ந்தான். நியாயமான காரியங் களையே செய்த தினால் சமாதானத் தோடு இருந்தான். ஏழைகளுக்கும், தேவையோடு இருந்தவர்களுக்கும் உதவி செய்தான். அதனால் அவன் செய்த அனைத்து காரியங்களும் எளிதாய் நடந்தது. கர்த்தருடைய இதய விருப்பத்தை நிறைவேற்றினான். கர்த்தரைப்பற்றி சரியாய் அறிந்தவர்கள் ஏழை, எளியவர்களுக்கு உதவி செய்வார்கள்.

ஆனால், யோசியாவின் மகனாகிய யோயாக்கீம் நேர்மையற்ற ஒரு வாழ்க்கையை வாழ்ந்தான். தன் தகப்பனைப்போல் நேர்மையான வாழ்க்கையை வாழ விரும்பவில்லை. தனக்கு வேலை செய்த ஜனங்களுக்கு கூலி கொடுக்காமல் ஏமாற்றினான். தனக்கு விஸ்தாரமான வீட்டையும் காற்று வீசும் விசாலமான மேலறை களையும் கட்டினான். **அநீதியினாலே தன் வீட்டையும், அநியாயத்தினாலே தன் மேலறைகளையும் கட்டி, தன் அயலான் செய்யும் வேலைக்குக் கூலி கொடாமல் அவனைச் சும்மா வேலை கொள்ளுகிறவனுக்கு ஐயோ!** (எரேமியா *22:14*). யோயாக்கீம் சுயநலமுள்ள வனாக இருந்தான். தனக்கு வீடு கட்டுவதற்காக ஏழை ஜனங்களுக்கு கூலி கொடுக்காமல் வேலை செய்ய வைத்தான். தன் நாட்டிலுள்ள ஏழை மக்களின் கஷ்டங்களையும், தேவை களையும் எண்ணிக்கூட பார்க்க வில்லை. அவனுடைய தேவை களைப்பற்றியும், நன்மைகளைப் பற்றியுமே நினைத்துக் கொண்டிருந் தானேயொழிய, ஏழைகள் நன்றாக வாழவேண்டும் என்ற அக்கரையில்லா திருந்தான். அப்பாவி மக்களுக் குள்ளதை திருடுவதையே விரும்பி னான். செய்த வேலைக்கு கூலி கொடுக்காமல் அவன் மட்டும் நன்றாக வாழவேண்டும் என்று நினைத்தான். கர்த்தருக்கு கீழ்ப்படியாமல், அவருக்கு பயந்து வாழாமல், தான் பாதுகாப்பாக இருப்பதற்கு வீட்டை கட்டினான். அதனால் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவன்மேல் வந்தது. எகிப்தின் ராஜா அவனைக் கைதியாக பிடித்துக் கொண்டு போகும் வழியில் மரித்தான். அவன் தன் தகப்பனைப்போல சரியான வாழ்க்கை வாழாததால், தேவகோபத்துக்குள் ளானான். மூன்று மாதங்கள்தான் ராஜாவாக இருந்தான். **ஏழைகளுடைய நியாயத்தை உண்மையாய் விசாரிக்கிற ராஜாவின் சிங்காசனம் என்றும் நிலை பெற்றிருக்கும்** (நீதிமொழிகள் *29:14*).





பிரியமானவர்களே! நாம் எப்படியாக வாழ்கிறோம்? கர்த்தருக்கு பயந்து, அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து வாழ்கிறோமா? நீதியும் நியாயமாய் நடந்து ஏழைகளுக்கு உதவி செய்து, கர்த்தருடைய விருப்பத்தை நிறைவேற்று கிறோமா? நம்மிடம் வேலை செய்ப வர்களுக்கு வேலைக்கேற்ற கூலியை சரியான வேளையில் கொடுக்கிறோமா?

**ஏழைகள் பாழாக்கப்பட்டதினிமித்த மும், எளியவர்கள் விடும் பெருமூச்சி னிமித்தமும், நான் இப்பொழுது எழுந்து, அவன்மேல் சீறுகிறவர்களுக்கு அவனைக் காத்துச் சுகமாயிருக்கப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்** (சங்கீதம் *12:5*). இதை எளிய வேதாகமம் இப்படி யாகக் கூறுகிறது: ''ஆனால் கர்த்தரோ, தீயோர் ஏழைகளின் பொருட்களைத் திருடுவார் கள். உதவியற்ற ஜனங் களின் பொருட்களை அபகரிப்பார்கள். களைப் புற்றோரை இப்பொழுது நான் எழுந்து பாதுகாப் பேன் என்கிறார்''. அதி காரத்தில் உள்ளவர்களால் மோசமான வாழ்க்கை நிலைக்கு தள்ளப்பட்டவர்களுக்கு கர்த்தர் பாதுகாப்பாயிருப்பேன் என்று வாக்கு கொடுக்கிறார். துன்மார்க்கன் தாங்கள் விரும்பிய ஒன்றை நிறை வேற்ற ஏழைகளை நெருக்குகிறார் கள். தன் பேச்சாற்றலால் எதையும் சாதிக்கலாம் என்று நினைத்து ஏழைகளுக்கு எதிராக பொய்பேசி, பெருமைபேசி, உண்மையை புரட்டி ஏமாற்றுகிறவர்கள், தன்னலத்தோடு அவர்கள் விரும்பியதை செய்யுமாறு சாமர்த்தியமாக, திறமையுடன்பேசி, செயல்பட வைப்பார்கள்.

ஏழைகளின் சுதந்திரத்தையும், உரிமையையும் கொடுக்கவிடாமல், இரக்கமற்று நடந்து கொள்பவர் களுக்கு எதிராக கர்த்தர் இருக்கிறார். நம் தேவன் நீதியுள்ள நியாயாதிபதி. ஏழைகளுக்கு நியாயம் கிடைக்கச் செய்வார். தேவையில் இருப்பவர் களின் நலத்திற்கும், பாதுகாப்பிற்கும் வேண்டியன கிடைக்குமாறு கர்த்தர் பார்த்துக் கொள்வார். அவர்களுக்கு ஆதரவாயிருப்பார்.

ஏழைகளின் நியாயம் புரட்டப் படும்போது, அவர்களுக்குரியதை மற்றவர்கள் கொள்ளையிட



அவனை ஒப்புக்கொடீர். படுக்கையின்மேல் வியாதியாக் கிடக்கிற அவனைக் கர்த்தர் தாங்குவார்; அவனுடைய வியாதியிலே அவன் படுக்கை முழுவதையும் மாற்றிப்போடுவீர் (சங்கீதம் 41:1-3). ஏழை, எளியவர்கள்மேல் நினைக்கும்போது, அவர்களுக்காக நாம் அவர்களுக்கு எதிராக செயல்படுகிறவர்களிடம்பேசி உதவி செய்ய வேண்டும்.

ஏழைகள்மேல் இரக்கப்படுகிறவர்களுக்கு கர்த்தர் பல ஆசீர்வாதங்களை வைத்திருக்கிறார். சிறுமைப்பட்டவன்மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான்; தீங்குநாளில் கர்த்தர் அவனை விடுவிப்பார். கர்த்தர் அவனைப் பாதுகாத்து அவனை உயிரோடே வைப்பார்; பூமியில் அவன் பாக்கியவானாயிருப்பான்; அவன் சத்துருக்களின் இஷ்டத்துக்கு நீர் இரக்கப்பட்டு, அவர்கள் தேவைகளை மனதில் வைத்து உதவி செய்பவர்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள். துன்பங்கள், போராட்டங்கள் அவர்கள் வாழ்க்கையில் வரும்போது, கர்த்தர் அவர்களுக்கு உதவி செய்து மீட்பார். சத்துருக்கள் அவனை அழிக்க விடாமல் பாதுகாத்து விடுவிப்பார். வியாதியாய் இருக்கும்போது கர்த்தர் அவனைத் தாங்கி நோயை சுகப்படுத்துவார். கர்த்தர் நம்மை ஆசீர்வதிக்கும்போது, நாம் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக இருக்க வேண்டும்.

கர்த்தருடைய கிருபை உங்களோடிருப்பதாக.


**உங்கள் சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?**

இந்தப் பத்திரிகை வேண்டுவோர் சந்தா அனுப்பி பெற்றுக் கொள்ளவும்.

**உள்நாட்டு வருட சந்தா** ரூ. 200/-

**வெளிநாட்டு வருட சந்தா** ரூ. 2000/-

**S.PAULRAJ KENNEDY** என்ற பெயருக்கு DD/M.O / Cheque மூலம் அனுப்பவும். உங்களது முழு முகவரியையும் எழுதுங்கள். **ICICI** வங்கி வாயிலாகவும் நீங்கள் அனுப்பலாம்.

ICICI **வங்கி கணக்கின் பெயர் : S.PAULRAJ KENNEDY**

ICICI **வங்கி கணக்கு எண் : 0350 0150 7744**



**எங்களது முகவரி :** எஸ்.பால்ராஜ் கென்னடி, ஏ-1, டேஜு பிளாஸா, 2 தெற்கு அவென்யூ, ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை - 600 015. தமிழ்நாடு, இந்தியா




# தீர்க்கதரிசியும் தீர்க்கதரிசனமும்

– பால்ராஜ் கென்னடி

### 1. தீர்க்கதரிசியும், மனப்பாட வசனங்களும்

வேதத்தின் வார்த்தைகளை மனப்பாடம் செய்வது நல்லதுதான். நம் மனதிலும், உள்ளத்திலும் எப்போதும் அது தங்கியிருக்க வசதியாயிருக்கும். ஆனால், தீர்க்கதரி சனம் சொல்வதற்காக வேதத்தின் வார்த்தைகளை மனப்பாடம் செய்யும்போது, மிகவும் கவனமாகவும், ஜாக்கிரதையாகவும், எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டும்.

ஒருவருக்காக நாம் ஜெபிக்கும்போது, நமது மனது, நமது ஞாபகத்திலிருந்து, நாம் மனப்பாடமாக செய்த வசனங்களைக் கொண்டு வரும். அதை நாம் கர்த்தருடைய ஆவியானவர் சொன்னதாக தீர்க்கதரிசனமாக சொல்ல முடியாது, சொல்லவும் கூடாது. அப்போது (அந்த சமயத்தில்) நாம் மிகவும் ஜாக்கிரதையோடும், எச்சரிக்கையோடும் ஜெபத்திலே காத்திருக்க வேண்டும். கர்த்தருடைய ஆவியானவர், அவர்களுக்கானக் காரியத்தைக் குறித்தும், அதற்கான வேத வார்த்தையையும் நம் ஆவியிலே வெளிப்படுத்துவார். நமது புரிந்துகொள்ளுதலுக்காக(இது நமது மனதின் ஞாபகத்திலிருந்தா? அல்லது கர்த்தரிடத்திலிருந்தா? என்று தெரிந்து கொள்ளுவதற்காக) மீண்டும் ஒருமுறை கர்த்தரை வெளிப்படுத்தும்படி (பேசும்படி) கேட்கவேண்டும். கர்த்தர் மீண்டும் பேசுவார். அவருக்கு நமது சூழ்நிலை தெரியும். இரண்டாம்முறை கர்த்தர் பேசினபிறகே நாம் வாயைத் திறந்து தீர்க்கதரிசனம் சொல்ல வேண்டும்.

தீர்க்கதரிசன வரம் உள்ளவர்கள், வசனங்களை மேற்போக்காகப் படிக்கக் கூடாது. அதின் முழு அர்த்தத்தையும் தெரிந்துகொள்ள வேண்டும். எந்த சூழ்நிலையில், எந்த கால கட்டத்தில், எந்த நோக்கத்தோடு, எதற்காக கர்த்தர் அந்த வசனத்தை (வார்த்தையை) பயன்படுத்தினார் என்பதை சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

அதேபோல, நம்மிடம் ஜெபிக்க வருபவர்கள், எந்த சூழ்நிலையில் உள்ளார்கள் என்பதை மிகவும் கவனமாகக் கேட்டு, புரிந்துகொள்ள வேண்டும். மேம்போக்காகக் கேட்கக் கூடாது. அவர்களது சூழ்நிலை, நிலைமையை நாம் சரியாகப் புரிந்துகொண்டால்தான், கர்த்தரிடம் நாம் சரியாக ஜெபிக்க முடியும். கர்த்தருக்கும்,அவர்களுக்கும் இடையே நாம்தான் பாலம்போல் இருந்து இணைக்கிறோம். நாம் சரியாக இருந்தால்தான், கர்த்தரிடமிருந்து அவருடைய காரியங்கள், அவருடைய பிள்ளைகளுக்கு சரியாகப் போய்ச் சென்றடையும். தீர்க்கதரிசனம் சொல்லும்போது, நமது ஆத்துமாவைக்குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நமது

மனது, உணர்ச்சிகளைச் சார்ந்து நாம் தீர்க்கதரிசனம் சொல்லிவிடக் கூடாது. நமது மனது, அவர்களுக்காக பரிதாபப் படக்கூடும். அதினால், நமக்கு துக்கம் ஏற்படலாம். அதையொட்டி வேதத்தின் வார்த்தை நம்முடைய ஞாபகத்திற்கு வரலாம். அதை உணர்ச்சிவசப்பட்டு தீர்க்கதரிசனமாக சொல்லிவிடக் கூடாது. பரிசுத்த ஆவியானவரோடு சரியான இணைப்பில் இருக்க வேண்டும்.

நமது மனது, உணர்ச்சிகளைக் கவனித்து, அதை கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும். நமது ஆவியையும் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க வேண்டும். தீர்க்கதரிசன ஆவி, தீர்க்கதரிசிக்கு கட்டுப்பட்டதே. நாம் முழுமையாக கட்டுப்பாட்டில் இருந்தால்,கர்த்தர் நம்மை மிக வல்லமையாகப் பயன்படுத்துவார். ஏனென்றால், நம்மை அவர் முழுமையாக நம்பி செயல்படலாம்.

**2. நிதானப்படுதல்**

நிதானம் என்பது, நமது மாம்சத்தின் உணர்ச்சிகளுக்கு (ஆத்துமாவில் உள்ள உணர்ச்சிகளுக்கு) அடிபணிந்து விடாதபடி, நமது ஆவியில் நிச்சயம் உண்டாகும்வரை காத்திருப்பதே. ஒரு காரியத்தைக்குறித்து உணர்ச்சியின் அடிப்படையில் முடிவெடுத்து செயல்படாதபடி, பொறுமையாயிருந்து, நமது ஆவியில் அந்தக் காரியத்தைக் குறித்ததான பின் விளைவுகளை யோசித்துப் பார்த்து (உணர்ந்து), முடிவு எடுப்பதற்காகக் காத்திருத்தலே நிதானம் ஆகும். நிதானம் இருந்தால், அவசரம் இருக்காது, குழப்பம் இருக்காது, பயம், பர பரப்பு, பட படப்பு இருக்காது. பொறுமை, திட நம்பிக்கை, தெளிவு, தைரியம் இருக்கும்.

**3. தீர்க்கதரிசனம் - நம்பிக்கை**

தீர்க்கதரிசனம் சொல்லும்போது மிகவும் கவனமாகவும், எச்சரிக்கையாகவும், ஜாக்கிரதையாகவும் சொல்ல வேண்டும். ஒரு தடவை நாமாக ஒன்றை தீர்க்கதரிசனமாகச் சொல்லி, அது நடக்காமல்போனால், ஜனங்களுக்கு நம்மீதுள்ள நம்பிக்கை போய்விடும். அதன்பிறகு எத்தனை தீர்க்கதரிசனங்களைச் சொன்னாலும் நம்பமாட்டார்கள்.

**4. தீர்க்கதரிசனம் - மிகவும் முக்கியமானது**

யாருக்கேனும் நாம் தீர்க்கதரிசனம் சொல்லும்போது, ஒன்றை மறந்துவிடக் கூடாது. ஏற்கனவே அவர்களைகுறித்துத் தீர்க்கதரிசனங்களைக் கேட்டிருப்பார்கள் என்பதை. நாம் சொல்லும் தீர்க்கதரிசனம் தவறாக இருக்கும் பட்சத்தில், நம்மையும், நம்முடைய தீர்க்கதரிசனத்தையும் வெறுத்து, ஒதுக்கி விடுவார்கள். இப்படி நடக்காமலிருக்க வேண்டுமென்றால் நாம் செய்ய வேண்டியது: கர்த்தருடைய ஆவியானவரின் உணர்த்துதலை மிகத் துல்லியமாக நாம் கேட்கும்வரை, நாம் தீர்க்கதரிசனம் சொல்லக் கூடாது. கர்த்தருடைய வேதத்தை மிகவும் ஆழமாகத் தியானிக்கிறவர்களாக இருக்க வேண்டும். தொடர்ந்து வேதத்தை தியானித்து, கிறிஸ்துவின் சிந்தை, சித்தம் குறித்து தெளிவுள்ளவர்களாக இருக்க வேண்டும். அதிக நேரம் கர்த்தருடைய பாதத்தில் அமர்ந்திருக்க வேண்டும். கர்த்தரோடுகூட உள்ள ஐக்கியம் வேண்டும். அவரோடு தனித்து இருக்க வேண்டும். உபவாசத்தோடும், ஜெபத்தோடும், தாகத்தோடும் கர்த்தருடைய வெளிப்பாடுகளுக்காகக் காத்திருக்க வேண்டும். கர்த்தர் வெளிப்படுத்தும் எல்லாக் காரியங்களையும் (உடனுக்குடன்) எழுத வேண்டும். வெறும் தாளில் எழுதக் கூடாது. பிரத்யேகமாக அதற்கென்று நோட்டு புத்தகம் வைத்து, அதில் எழுத வேண்டும். கர்த்தரோடுகூட உள்ள ஐக்கியத்திற்கும், வெளிப்பாட்டிற்கும், தீர்க்கதரிசனத்திற்கும் நாம் எப்படிப் பட்ட முக்கியத்துவம் கொடுக்கிறோம் என்பதை (thirst, attitude, intention, perspective) கர்த்தர் பார்ப்பார். தீர்க்கதரிசனம் சொல்ல நாம் தகுதியாவது ஒரு நாள் காரியமல்ல. பல நாட்கள், பல மாதங்கள், பல வருடங்களாக நடக்கின்றக் காரியம். It is not an event, it is a process. தீர்க்கதரிசனம் என்பது, ஒரு மனுஷன் நாம் பேசும் காரியம் அல்ல. தீர்க்கதரிசனம் என்பது கர்த்தர் பேசும் காரியம். **கர்த்தரே தீர்க்கதரிசி.**

தீர்க்கதரிசனத்தைக் கேட்கும்போது, அது சாதாரணமாக, ஒரு மனுஷனுடைய சத்தம்போலவும், அன்றாடம் நாம் படித்த பரிச்சயமான வேத வசனம்போலவும் காணப்படுவதால், தீர்க்கதரிசனத்தை மிகவும் லேசாக எடுத்துக் கொள்ளக்கூடாது. ஒரு மனுஷனுக்கு தகவல் பரிமாற்றம் (communication) செய்யப்படுவதால், அது இப்படித் தோன்றுகிறது. பேசுபவர் (கர்த்தர்), பேசப்படும் காரியத்தின் முக்கியத்துவம், யாருக்காக, எதற்காகப் பேசப்படுகிறது என்பதையெல்லாம் யோசித்துப் பார்த்தால், தீர்க்கதரிசனத்தின் முக்கியத்துவம் தெரியும். அனுதின வாழ்க்கையிலுள்ள மிகவும் சாதாரண காரியங்களைக்குறித்து கர்த்தர் பேசமாட்டார். உதாரணமாக, நாளை காய்கறி, அரிசி என்ன விலைக்கு விற்கப்படும் என்பதைக் குறித்து கர்த்தர் பேசிக்கொண்டிருக்க மாட்டார். ஒருவேளை, விலைவாசி மிகப் பெரிய அளவில் பாதிப்பை உண்டு பண்ணப் போகிறது என்றால், அதைக் குறித்துப் பேசுவார். விளைவைப் பொறுத்தது, கர்த்தர் பேசுவது. அதேபோல, ஒருவர் உடுத்தும் உடையைக்குறித்து பேசுகிறாரென்றால், அது அந்த உடைக்காக அல்ல, அதை உடுத்தியிருக்கும் மனுஷனுடைய இருதயத்தை, குணாதிசயத்தை வெளிப்படுத்தவே. நாம் தீர்க்கதரிசனம் சொல்வதைக் காட்டிலும், நாம் வேதத்தை எவ்வளவு கற்று அறிந்திருக்கிறோம் என்பதும், கர்த்தரோடுகூட எப்படிப் பட்ட உறவில் இருக்கிறோம் என்பதும் முக்கியம்.

**5. தீர்க்கதரிசனமும் - வெளிப்பாடும்**

தீர்க்கதரிசனம் என்பது ஒரு மனுஷன், குடும்பம், சபை, தேசங்கள் குறித்து சொல்லுவது. வெளிப்பாடு என்பது கர்த்தருடைய, மனுஷனுடைய இருதயத்திலும், சிந்தையிலும் இருப்பதை வெளிப்படுத்துவது. வெளிப்பாடுகளுள்ள ஒரு மனுஷன், தீர்க்கதரிசனமும் சொல்லுவான். ஆனால், தீர்க்கதரிசனம் சொல்லுபவர்களெல்லாம், வெளிப்பாடுகள் உள்ளவர்களாக இருக்க மாட்டார்கள். அறிவை உணர்த்தும் வசனம் என்ற வரம் உள்ளவனுக்கே வெளிப்பாடுகள் கிடைக்கும். ஏனோக்கு, நோவாவைப்போல கர்த்தரோடு சஞ்சரிக்கிறவனும், ஆபிரகாம் (2 நாளாகமம் 20:7, யாக்கோபு 2:23, ஏசாயா 41:8), மோசேயோடு (யாத்திராகமம் 33:11, எண்ணாகமம் 12:8). கர்த்தர் எப்படி ஒரு நண்பனோடு பேசினதுபோல பேசினாரோ அப்படிப் போல உள்ள உறவில் இருக்கிறவனே வெளிப்பாடுகளுள்ள மனுஷன்.

**6. தீர்க்கதரிசனமும் - பரிபூரணமான வளர்ச்சியும்**

கர்த்தர், நம்மை உருவாக்குவதற்கும், எடுத்து பயன்படுத்துவதற்கும் நம்முடைய ஒத்துழைப்பு அவசியம். நமது சுய சித்தத்தை (சுயாதீனம்) ஒருபோதும் கர்த்தர் தடைசெய்ய மாட்டார். அதில் குறுக்கிடவும் மாட்டார். அப்படி இருந்திருந்தால், பாவம், மனுஷனுடைய வாழ்க்கையில் நுழைந்திருக்க முடியாது. ஏவாள், பாவத்தில் விழுந்தது, சுயமாக நடந்ததினாலேயே. கர்த்தர், நம்மை, ஜெபிக்கவும், ஆராதிக்கவும், வேதத்தைத் தியானிக்கவும், ஆலயத்திற்கு வருவதற்கும் அழைக்க மாட்டார், கட்டளை கொடுக்கவும் மாட்டார். முதலில் நாம் மனமுவந்து முன்வர வேண்டும். அடுத்தது, முழுமையான, பரிபூரணமான அர்ப்பணிப்பு அவசியம். நாம், நம்முடைய இஷ்டம்போல், சுயமாக செயல்பட்டுக் கொண்டிருந்தால், கர்த்தர், அவரது விருப்பத்தை நம்மில் செயல்படுத்த முடியாது. அரைகுறையான அர்ப்பணிப்பும் கூடாது.

- தொடரும்

# கர்த்தர் யாரிடம் எப்படி பேசுவார் ?

— பால்ராஜ் சென்னை

**- தொடர்ச்சி..**

*11. வாழ்க்கையில் எதற்கு முன்னுரிமை கொடுப்பது என்பதில் நாம் சரியாக இருக்க வேண்டும். அப்போது வாழ்க்கையின்மீதான நம் கண்ணோட்டம் சரியாக இருக்கும். 1. கர்த்தர், 2. குடும்பம், 3. ஊழியம் அல்லது தொழில்-இப்படித்தான் நமது வாழ்க்கையில் முன்னுரிமை கொடுப்பது இருக்கவேண்டும்( 1 தீமோத்தேயு 5:8).ஆடையைவிட நம் சரீரம் முக்கியம்(ஆரோக்கியம்). உண்பது, குடிப்பதைக்காட்டிலும், நம்முடைய ஜீவன் (உயிர்) முக்கியம். இதுதான் இயேசு கிறிஸ்துவின் பார்வை, நோக்கம் (மத்தேயு 6:24-34). இதுதான் நம் வாழ்க்கை, ஊழியத்திற்கு சரியான அஸ்திபாரம். இந்த கண்ணோட்டம் இருந்தால்தான், நம் பேச்சு, ஜெபம், பிரசங்கம், ஊழியம் எல்லாம் சரியாக இருக்கும். கார், பங்களாவைவிட சமாதானம் பெரிது. உடை, பொருட்களைக்காட்டிலும் பரிசுத்த ஆவியின் அபிஷேகம்(அன்பு, கிருபை, இரக்கம், ஞானம், தாலந்துகள், வரங்கள், பொறுமை, சாந்தம்..) முக்கியம். தற்காலிகத்திற்கும், நிரந்தரத்திற்கும் உள்ள வித்தியாசத்தை அவசியம் நாம் அறிந்துகொள்ளவேண்டும்.*

*12. கர்த்தர் நம்மோடு துல்லியமாக, நுணுக்கமாக, பிரத்தியட்சமாக இடைபடுவதற்கு, அவரோடு நாம் கொண்டுள்ள ஐக்கியம் மிக மிக முக்கியம், அவசியம். அவரோடு எப்போதும் பேசிக்கொண்டு இருக்கவேண்டும். அதற்கும் மேலாக அவர் நம்மிடம் பேசுவதற்கு இடம் கொடுக்க வேண்டும். அவரே கேள்வியையும் எழுப்பி, பதிலையும் தருவார். சந்தேகங்கள் எப்படி வரும், பயம் எப்படி வரும், எப்படியெல்லாம் காரியங்கள் நடக்கலாம் என்பதையெல்லாம் விவரமாக நமக்கு சொல்லித் தருவார். இதுதான் ஒரு குருடனை வழிநடத்துவதுபோல என்று சொல்லுகிறார்(ஏசாயா 42:16). ஒவ்வொரு அடியாக நமக்கு சொல்லித் தருவார்.*

*13. நம்மைக்கொண்டு வித்தியாசமாகக் கர்த்தர் ஊழியத்தைச் செய்வார். எனது தகப்பனார் இறக்கும் தருவாயில் இருந்தபோது, இறப்பு இப்போது இல்லை என்று கர்த்தர் சொல்லி அவரை எழுப்பினார். எனது தாயாருக்கு அதேபோல ஒரு சூழ்நிலை வந்த போதும், கர்த்தர் அவர்களையும் எழுப்பினார். இவைகளுக்காக நான் அதிகமாக ஜெபிக்கவில்லை.கர்த்தரே எழுப்பினார்.ஆனால்,சரீர பிரகாரமாக அந்த சூழ்நிலைக்குஎன்னைக் கொண்டு போய், அவர்களை எழுப்பி, என்னை குடும்பத்திலுள்ள மற்றவர்களுக்கு முன்பாகக் கனப்படுத்தினார். அப்படிப் போல, தம்முடைய ஊழியக்காரர்களைக் கர்த்தர் கனப்படுத்துவார். ஒருபோதும் வெட்கப்பட்டுப் போகவிடமாட்டார்.*

*14. தேவ பிரசன்னத்தில் இருக்கும் போது, நாம், நம் சுயத்தை மறப்போம். ஆனாலும், என்ன நடக்கிறது என்பது நம் மனது அறியும். நம் ஆவியை அடக்கியிருக்கப் பழக வேண்டும். சுய கட்டுப்பாட்டை இழந்துவிடக் கூடாது. அப்படி இருந்தோமானால், ஜனங்கள், நம்மைவிட்டு விலகிப் போய்விடுவார்கள். பின்னர், கர்த்தரும் நம்மோடு இடைபடுவதை நிறுத்தி விடுவார்.*

*15. கர்த்தர், யோசனை, ஆலோசனை, திட்டம் தருவார். விரிவாகப் பேசுவார். அவர் பேசின காரியத்தில் நமக்கு எந்த சந்தேகமும் வராது. அதற்கும் மேற்கொண்டு யோசிக்கவோ, யூகிக்கவோ முடியாது. ஒரு காரியத்தைக் குறித்துக் கர்த்தர் பேசும்போது, அதில் சம்பந்தப்பட்டுள்ள எல்லா மனிதர்களுக்கும் அதில் பதில் இருக்கும்.*

*16.சரீர தோற்றத்தை வைத்து கர்த்தர் பேசமாட்டார்.உள்ளான மனுஷனைப் பார்ப்பார். கடந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் அறிந்து கர்த்தர் பேசுவது இருக்கும். சின்ன தாவீதை எதிர்காலத்தின் ராஜாவாகப் பார்த்தார், யாக்கோபை இஸ்ர வேலாகப் பார்த்தார்.*

*17. சபையில், சிலருடைய அந்தரங்க பாவங்களை கர்த்தர் நமக்கு வெளிப்படுத்துவார். அதை சபையில் நாம் வெளிப்படுத்தக்கூடாது. அவர்கள் தனித்து வந்து ஜெபிக்கும்போது, அவர்களிடம் மாத்திரம் வெளிப்படுத்தவேண்டும். சபையில் வெளிப்படுத்தினால், மற்றவர்கள் முன்பாக அவர்கள் வெட்கப்பட்டு நிற்கும்படியாக ஆகிவிடும். கர்த்தரைவிட்டு அவர்கள் விலகிச் செல்லவும் நேரிடலாம்.*

*18. நாம், ஒரு குறிப்பிட்ட நபருக்காக அல்லது காரியத்திற்காக ஜெபிக்கும்போது, ஏற்கெனவே இதுபோலவே இருந்த நபர் அல்லது சம்பவமும், அப்போது கர்த்தர் பேசியதும், நமது ஞாபகத்திற்கு வரும். அதையே இங்கேயும் கர்த்தருடைய வாக்காக எடுத்துக் கொள்ளக்கூடாது. தொடர்ந்து ஜெப நிலையிலும், தியானத்திலும் இருக்கவேண்டும். இப்போதுதான் அதிகமான கவனத்துடன் இருக்க வேண்டும். அப்படி கவனமாக இருக்கும்போது, கர்த்தருடைய பரிசுத்த ஆவியானவர், தெளிவாக, குறிப்பாக தம்முடைய கருத்தை நமக்கு வெளிப்படுத்துவார். வேதத்தின் வார்த்தை ஒன்றுதான். ஆனால், அந்தந்த மனுஷனுக்கு ஏற்ற விதத்தில் பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்துவார். தீர்க்கதரிசனம் சொல்லுவதில் அவசரப்படக் கூடாது. நிதானம், பொறுமை, முதிர்ச்சி வேண்டும்.*